# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

## பாராளுமன்றம்

---

# 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகச் சட்டம்

---

[1981, செத்தெம்பர் 3 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

1981, *செத்தெம்பர் மாதம்* 04 *ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்** *வர்த்தமானப் பத்திரிகையின்* II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

விலை : ரூபா 1.30 தபாற் செலவு : சதம் 75

# 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகச் சட்டம்

[1981, செத்தெம்பர் மாதம் 3 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]
ச. வ.—ஓ. 35/80
1334

அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகமொன்றைத் தாபிப்பதற்கும், அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

1. இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின் 55 ஆம் இலக்க, இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சனாதிபதியினால் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். இத்தேதி இச்சட்டத்தில் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

## பாகம் I

### இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம்

இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகத்தைக் கட்டியமைத்தல்.

2. (1) இலங்கை, அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம் என அழைக்கப்படவேண்டிய நிறுவகம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். அது இதனகத்துப்பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்.

(2) நிறுவகமானது, (1) ஆம் உட்பிரிவால் அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட பெயரினால், இடையறு வழியுரிமையும் ஒரு பொது இலச்சினையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும்; அத்துடன் அத்தகைய பெயரில் அது வழக்குத் தொடுக்கலாம் என்பதுடன், அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

நிறுவகத்தின் இலக்குகளும் குறிக்கோள்களும்.

3. நிறுவகத்தின் இலக்குகளும் குறிக்கோள்களும், அடிப்படைக் கற்கைகளிலும் உயர்நிலைக் கற்கைகளிலும் அக்கறையொன்றை உருவாக்குவதாகவும் அடிப்படைக் கற்கைகளுக்கும் உயர்நிலைக் கற்கைகளுக்குமான வசதிகளை ஏற்பாடு செய்வதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், குறிப்பாக அவை—

(அ) தூயகணிதம், பௌதிகவியல், இரசாயனவியல், உயிர் அறிவியல், சமூக அறிவியல்கள், தத்துவவியல் ஆகியவற்றைக் குறிப்பாக வலியுறுத்தி அடிப்படைக் கற்கைகளில் பொதுவாக ஆராய்ச்சியையும் தொடக்கநிலை ஆய்வுகளையும் ஆரம்பித்து, மேம்படுத்தி நடாத்துதல் ;

(ஆ) அதன் கல்விப்பாங்கான வேலையைப் பின்பற்றியும், அறிவியல்சார் அறிவைப் பரப்புவதற்குமாக விரிவுரைகள், கூட்டங்கள், கருத்தரங்குகள், ஆய்வரங்குகள் ஆகியவற்றை ஒழுங்குசெய்தல் ;

(இ) விரிவுரைகளை வழங்குவதற்கும் அதன் கல்விப்பாங்கான தொழிற்பாடுகளில் பங்குபற்றுவதற்கும், ஆக்கவேலைகளில் முனைப்பாக ஈடுபட்டிருக்கும் அறிவியலாளர்களை இலங்கையிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் அழைத்தல் ;

2—எ 57723—6,600 (07/81)

(ஈ) பிறநாடுகளிலுள்ள அறிவியல்சார் வேலையாளர்களுடனும் அறிவியல் சார் நிறுவகங்களுடனும் இணைப்பைத் தாபித்துப் பேணுதலும், நிறுவகத்தின் இலக்குகளும் குறிக்கோள்களும் தொடர்பான கருமங்களில் சர்வதேச ஒத்துழைப்பை மேம்படுத்துதலும்;

(உ) நிறுவகத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் மேம்படுத்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய வேறு செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

நிறுவகத்தின் தத்துவங்கள்.

4. நிறுவகத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் எய்துவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய தத்துவங்களையும் உரிமைகளையும் நிறுவகம் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன், குறிப்பாக அது,—

(அ) நிறுவகத்தினது அலுவல்களின் முகாமை தொடர்பாக விதிகளை ஆக்கலாம்;

(ஆ) போராசிரியர் பதவிகள், உறுப்பாண்மைகள், ஆராய்ச்சி இணைவர் பதவிகள் ஆகியவற்றை ஏற்படுத்தலாம் என்பதுடன், அடிப்படைக் கற்கைகளுக்காகவும் உயர்நிலைக் கற்கைகளுக்காகவும் பரிசில்களையும் பதக்கங்களையும் வழங்கலாம்;

(இ) நூலகங்களையும் ஆய்வுகூடங்களையும் நிறுவலாம், அவற்றுக்கு வசதிகளை அமைக்கலாம், அவற்றைப் பேணலாம் என்பதுடன், அடிப்படைக் கற்கைகளுக்காகவும் உயர்நிலைக் கற்கைகளுக்காகவும் வேறு சேவைகளையும் ஏற்பாடு செய்யலாம்;

(ஈ) ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு என்பன வகையாக அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஏதேனும் ஆதனத்தைப் பெற்று வைத்திருக்கலாம் என்பதுடன், நிறுவகத்தின் விதிகளுக்கமைய அதை விற்கலாம், சாட்டுதல் செய்யலாம், கொடுத்துமாற்றலாம் அல்லது வேறு வகையில் கையாளலாம்;

(உ) அடிப்படைக் கற்கைகளினதும் உயர்நிலைக் கற்கைகளினதும் மேம்பாட்டிற்காக ஓர் ஆராய்ச்சி நிதியத்தைத் தாபிக்கலாம்;

(ஊ) நிறுவகத்தின் குறிக்கோள்களை முழுமையாக அல்லது பகுதியளவில் கொண்டுள்ள அல்லது அவற்றையொத்த குறிக்கோள்களைக் கொண்டுள்ள, இலங்கையிலுள்ளனவான அல்லது வெளிநாட்டிலுள்ளனவான கல்விசார் நிறுவனங்களுடன் அல்லது வேறு நிறுவனங்களுடன் ஆளணியினர், மாணவர்கள் ஆகியோரது பரிமாற்றத்திற்காகவும், அவர்களின் பொதுக் குறிக்கோள்களுக்கு உசிதமானவையாக இருக்கக்கூடிய அத்தகைய நோக்கங்களுக்காகவும் ஒத்துழைப்புக்கான உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளலாம்;

(எ) நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமனங்களைச் செய்யலாம்; அத்துடன்

(ஏ) நிறுவகத்தின் அபிப்பிராயப்படி, அதனது இலக்குகளையும் குறிக்கோள்களையும் அடைவதற்கும் அதனது பணிகளை நிறைவேற்றுவதற்கும் வசதியளிப்பதற்கு அவசியமாகவுள்ள அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் அல்லது காரியங்களையும் செய்யலாம்.

## பாகம் II

### நிறுவகத்தின் அதிகாரசபைகள்

5. நிறுவகத்தின் அதிகாரசபைகளாவன, ஆளுநர் சபையாகவும் வித்துவப் பேரவையாகவும் இருத்தல் வேண்டும். *நிறுவகத்தின் அதிகாரசபைகள்.*

6. (1) நிறுவகமானது, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதும், இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பிடுசெய்யப்படுவதுமான ஆளுநர் சபையொன்றினால் நிருவகிக்கப்படுதல் வேண்டும் :— *ஆளுநர் சபை.*

(i) சபையின் தவிசாளராக இருக்கவேண்டிய சனாதிபதி ;

(ii) முதலமைச்சர் ;

(iii) எதிர்க்கட்சித் தலைவர் ;

(iv) நிறுவகத்தின் பணிப்பாளர் ;

(v) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ;

(vi) வித்துவப் பேரவையினால் அதனது உறுப்பினர்களுக்கிடையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று ஆட்கள் ; அவர்களில் ஒவ்வொருவரும் மூன்று ஆண்டுகளுக்கு, அல்லது அவர் வித்துவப் பேரவையின் உறுப்பினர் ஒருவராக இருப்பதிலிருந்து இல்லாதொழியும்வரை, இவற்றில் எத்தேதி முந்தியதாகவுள்ளதோ அத்தேதிவரை, பதவிவகித்தல் வேண்டும் ; அத்துடன்

(vii) நிறுவகத்தின் வேலை தொடர்பாகச் சிறப்பான தகைமை பெற்றுள்ளவர்களெனச் சனாதிபதி அபிப்பிராயப்படும் ஆட்களிடையேயிருந்து மூன்று ஆண்டுகள் கொண்டவொரு காலப்பகுதிக்குச் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட வேறு நான்கு ஆட்கள்.

(2) ஓராம் உட்பிரிவின் (vi) ஆம் உட்பந்தியின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், இறப்பினால், பதவிவிலகுவதனால், வித்துவப் பேரவையின் உறுப்பினரொருவராக இருப்பதிலிருந்து இல்லாதொழிவதனால் அல்லது அகற்றப்படுவதனால் தமது பதவியை வறிதாக்குவதன் விளைவாக ஏற்படும் வெற்றிடம் ஒன்றானது, வித்துவப் பேரவையினால் அதன் உறுப்பினர்களுள் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதன்மூலம் நிரப்பப்படுதல் வேண்டும் ; அவர் தனது முற்பதவியாளரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக் காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(3) சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், இறப்பினால், பதவிவிலகுவதனால் அல்லது அகற்றப்படுவதனால் பதவியை வறிதாக்குவதன் விளைவாக ஏற்படும் வெற்றிடமொன்று, சனாதிபதியினால் நிரப்பப்படுதல் வேண்டும். வெற்றிடம் ஒன்றை நிரப்புவதற்கென அவ்வாறு நியமிக்கப்பட்ட எவரேனுமாள், தனது முற்பதவியாளரின் முடிவுறாதெஞ்சியுள்ள பதவிக்காலத்திற்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின் (vi) ஆம் உட்பந்தியின்கீழ் வித்துவப் பேரவையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட, அல்லது (1) (vii) ஆம் உட்பிரிவின்கீழ் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், சனாதிபதிக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின்மூலம் எந்நேரத்திலேனும் தமது பதவியிலிருந்து விலகலாம் என்பதுடன், அத்தகைய பதவிவிலகல் ஏற்கப்பட்டதென அத்தகைய உறுப்பினருக்கு எழுத்தில் சனாதிபதி தெரியப்படுத்தும் வரை அத்தகைய பதவிவிலகல் பயனுறுதலும் ஆகாது.

(5) ஓராம் உட்பிரிவின் (vi) ஆம் உட்பந்தியின்கீழ் வித்துவப் பேரவையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட, அல்லது (1) (vii) ஆம் உட்பிரிவின்கீழ் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், சுகவீனம் காரணமாக, உடற்பலவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமை காரணமாக மூன்று மாதங்களுக்குக் குறையாத ஒரு காலப்பகுதிக்குத் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்குத் தற்காலிகமாக இயலாதவராக இருக்கின்றவிடத்து, எழுத்தில் சனாதிபதிக்கு அறிவித்தல் அத்தகைய உறுப்பினரின் கடமையாதல் வேண்டும். சனாதிபதி, (1) (vii) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு, அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென இன்னோர் ஆளை நியமிக்கலாம்.

(6) இப்பிரிவின்கீழ் சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர், காரணங்கள் காட்டப்படாது அவரால் எந்நேரத்திலேனும் அகற்றப்படலாமென்பதுடன், அத்தகைய அகற்றுகை எந்நீதிமன்றத்திலேனும் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

**சபையின் நடவடிக்கைகள்.**

7. (1) தவிசாளர், அல்லது அவர் வருகைதாராதிருப்பின் முதலமைச்சர், அல்லது அவ்விருவரும் வருகைதாராதிருப்பின் எதிர்க்கட்சித் தலைவர், அல்லது அம்மூவரும் வருகைதாராதிருப்பின் சபையின் கூட்டம் எதிலும் சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினரொருவர் அத்தகைய கூட்டத்துக்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(2) சபையானது அவசியமானதென அது கருதும்போதெல்லாம் கூடுதல் வேண்டும்.

(3) சபையின் ஒரு கூட்டமொன்றிற்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாதல் வேண்டும்.

(4) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய, சபையானது அதன் அலுவல்களை நடாத்துவதற்கான நடவடிக்கைமுறைக்காக விதிகளை ஆக்கலாம்.

(5) சபையின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் இருக்கும் காரணத்தினால் மட்டும் அல்லது அதன் எவரேனும் உறுப்பினரின் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு இருக்கும் காரணத்தினால் மட்டும் சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றதாகக் கருதப்படுதலாகாது.

(6) சனாதிபதியானவர் அவசியமெனத் தாம் கருதக்கூடியவாறான அத்தகைய ஆட்களின் கலந்தாலோசனையுடன் தீர்மானிக்கவேண்டிய அத்தகைய படிகளும் வேறு ஊதியமும் சபையின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

நிறுவகத்தின் செயலாளர்.

8. (1) சபையானது நிறுவகத்திற்குச் செயலாளரொருவரை நியமித்தல் வேண்டும்; அவரின் தத்துவங்களும், பணிகளும், கடமைகளும் இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் நிறுவகத்தின் விதிகளுக்கும் அமைய சபையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

(2) செயலாளரானவர், சபையின் பதிவேடுகளினதும் நிறுவகத்தின் ஆதனத்தினதும் கட்டுக்காவலுக்குப் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

(3) செயலாளரானவர் சபையின் பதவிவழிச் செயலாளராக இருத்தல் வேண்டும்.

(4) சபைத் தவிசாளரின் பணிப்பிற்கும் கட்டுப்பாட்டிற்கும் அமைய, நிறுவகத்தின் பொது நிருவாகத்திற்கும் கல்வித்துறை சாராப் பணியாட்டொகுதியினரின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிற்கும் செயலாளர் பொறுப்பாயிருத்தல் வேண்டும்.

சபைக்கு உரித்தாக்கப்பட்ட நிறுவகத்தின் தத்துவங்களும் கடமைகளும்.

9. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் நிறுவகத்தின் விதிகளுக்கும் அமைய, நிறுவகத்தின் தத்துவங்களும் கடமைகளும் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருத்தல் வேண்டும்; அவை குறிப்பாக—

(அ) நிறுவகத்தின் ஆதனத்தையும் நிதிகளையும் வைத்திருத்தலும், கட்டுப்படுத்தலும், நிருவகித்தலும்;

(ஆ) நிறுவகத்திற்கான ஒரு மாபுச் சின்னத்தைத் தெரிவுசெய்தலும் அதன் வடிவத்தைத் தீர்மானித்தலும் நிறுவகத்தின் பொது இலச்சினையின் கட்டுக்காவலுக்கு ஏற்பாடு செய்தலும் அதை எப்படிப் பயன்படுத்துவதென்பதைப் பணித்தலும்;

(இ) இச்சட்டத்திற்கும் நிறுவகத்தின் விதிகளுக்கும் இணங்க, நிறுவகம் சம்பந்தமான எல்லாக் கருமங்களையும் ஒழுங்குபடுத்தலும் தீர்மானித்தலும்;

(ஈ) வித்துவப் பேரவையின் விதப்புரைகளைக் கவனத்திற் கொண்டதன் பின்னர்—

(i) பேராசிரியர் பதவிகள், உறுப்பாண்மைகள், இணைவர் பதவிகள் ஆகியவற்றை நிறுவுதல், இல்லாதொழித்தல் அல்லது இடைநிறுத்துதல்; அத்துடன்

(ii) அத்தகைய பதவிகளுக்கான நியமனங்களுக்குத் தேவைப்படும் தகைமைகளைத் தீர்மானித்தலும், அப்பதவிகளை வகிப்போருக்குச் செலுத்தப்படற்பாலனவான வேதனதிகளைத் தீர்மானித்தலும்;

(உ) குறித்த நோக்கங்களுக்காக நிறுவகத்தின் கையாளுகையில் வைக்கப்பட்ட எவையேனும் நிதிகளை நிருவகித்தல்;

(ஊ) நிறுவகத்திற்குச் செய்யப்பட்ட எவையேனும் ஆதன அன்பளிப்புகளையும், நன்கொடைகளையும், மானியக்கொடைகளையும் பெறுதலும் ஏற்றுக்கொள்ளுதலும்;

(எ) நிறுவகத்தின் ஆண்டறிக்கையையும் ஆண்டுக் கணக்குகளையும் நிதிசார் மதிப்பீடுகளையும் பரிசீலனைசெய்தலும் அத்தகைய அறிக்கையையும், கணக்குகளையும், மதிப்பீடுகளையும் கசெற்றில் வெளியிடுதலும் ;

(ஏ) நிறுவகத்தின் வேலையைக் கொண்டுநடாத்துவதற்குத் தேவையான கட்டடங்கள், வளவுகள், தளபாடங்கள், உபகரணங்கள், மற்றும் வேறு பொருட்கள் என்பனவற்றை வழங்குதல் ; அத்துடன்

(ஐ) நிறுவகத்தின் சார்பில் ஒப்பந்தங்களைச் செய்தல், நிறைவேற்றுதல், வேறுபடுத்தல் அல்லது இல்லாதாக்குதல், அத்துடன் பயன்படுத்தப்படாத ஏதேனும் வருமானம் உட்பட நிறுவகத்துக்குரிய எவையேனும் பணங்களை, நம்பிக்கைப்பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நம்பிக்கைப்பொறுப்புப் பணங்களை எப்பிணைப்பொறுப்பில் முதலீடு செய்தல் சட்டமுறையானதாகவுள்ளதோ அப்பிணைப்பொறுப்பு எதிலும் முதலீடு செய்தலும், அல்லது அத்தகைய எவையேனும் பணங்களை இலங்கையிலுள்ள அசைவற்ற ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் முதலீடு செய்தலும், அல்லது அத்தகைய முதலீடுகளை வேறுபடுத்தலும், அல்லது உடனடிச் செலவினத்திற்கெனத் தேவைப்படாத அத்தகைய பணங்களின் ஏதேனும் பகுதியை ஏதேனும் வங்கியில் நிலையான வைப்பிலிடுதலும் :

ஆயின், ஏதேனும் கல்வித்துறைக் கருமம் தொடர்பில் வித்துவப் போவைக்கு அதன் விதப்புரையைப் பதிவதற்கும் சபைக்கு அதனை அனுப்புவதற்கும் முதலில் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தாலன்றி, அக்கல்வித்துறைக் கருமம் தொடர்பில் சபையினால் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படுதலாகாது.

இப்பிரிவில் " கல்வித்துறைக் கருமம் " என்பது, வித்துவப் போவையின் கட்டுப்பாட்டுக்கும் பொதுவான பணிப்புக்கும் அமைவான ஏதேனும் கருமம் எனப் பொருள்படும்.

வித்துவப் போவை.

10. (1) இதனகத்துப்பின்னர் "போவை" என அழைக்கப்படும் நிறுவகத்தின் வித்துவப் போவையானது பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) தவிசாளராக இருக்கவேண்டிய நிறுவகத்தின் பணிப்பாளர் (பதவிவழியாக) ;

(ஆ) அவ்வாறு நியமிக்கப்படுமிடத்து இணைப் பணிப்பாளர்களும் பிரதிப் பணிப்பாளர்களும் (பதவி வழியாக) ;

(இ) நிறுவகத்தின் நிரந்தரமான பேராசிரியர்கள் ;

(ஈ) நிறுவகத்தின் நிரந்தரமான உறுப்பினர்கள் ;

(உ) நிறுவகத்தின் ஆராய்ச்சி இணைவர்களால் அவர்களின் எண்ணிக்கையிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இரு உறுப்பினர்கள் : அத்துடன்

(ஊ) சபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டியவரான இலங்கையிலுள்ள ஒவ்வொரு பல்கலைக்கழகத்தினதும் இருவருக்கு மேற்படாத பிரதிநிதிகள்.

(2) பேரவையானது அவசியமானபோதெல்லாமும், அத்துடன் ஒவ்வோர் ஆண்டும் ஆகக் குறைந்தது பத்துத் தடவைகளாவது கூடுதல் வேண்டும்.

(3) பேரவையின் அலுவல்களை நடாத்துவதற்கான நடவடிக்கைமுறைக்காகச் சபையினால் விதிகள் ஆக்கப்படலாம்.

பேரவையின் தத்துவங்களும் பணிகளும்.

11. இச்சட்டத்தினது ஏற்பாடுகளுக்கும் நிறுவகத்தின் விதிகளுக்கும் அமைய பேரவையானது—

(அ) நிறுவகத்தின் போதனை, கல்வி, ஆராய்ச்சி, பரீட்சைகள் ஆகியவற்றின்மீது கட்டுப்பாடும் பொதுவான பணிப்பும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஆ) பிரிவு 6 (1) (vi) இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள மூன்று உறுப்பினர்களையும் சபைக்குத் தேர்ந்தெடுத்தலும், அத்துடன் அது அவசியமானதெனக் கருதின், அவர்களுள் எல்லோரையும் அல்லது எவரையும் அகற்றுவதற்கு எந்நேரத்திலும் விதந்துரைத்தலும் வேண்டும் ;

(இ) நிறுவகத்தின் பணிப்பாளரினதும், இணைப் பணிப்பாளர்களினதும், பிரதிப் பணிப்பாளர்களினதும், பேராசிரியர்களினதும், இடைவருகைப் பேராசிரியர்களினதும், உறுப்பினர்களினதும் நியமனம் பற்றிச் சபைக்கு விதந்துரைத்தல் வேண்டும் ;

(ஈ) பணிப்பாளர் பதவி வறிதாகும்போதிலெல்லாம் அத்தகையவரின் நியமனம் பற்றிச் சபைக்கு விதந்துரைத்தல் வேண்டுமென்பதுடன், அவரை அகற்றுவது அவசியமானதென அது கருதின், அதைப் பற்றி விதந்துரைத்தலும் வேண்டும் ;

(உ) எல்லாக் கல்வித்துறைக் கருமங்கள் பற்றியும் தொடர்புபட்ட கருமங்கள் பற்றியும் சபைக்கு மதியுரை வழங்குதல் வேண்டும் ;

(ஊ) நிறுவகத்தின் கற்கைப் பகுதிகள் தொடர்பாகச் சபைக்கு மதியுரை வழங்குதல் வேண்டும் ; அத்துடன்

(எ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்கப் பேரவையின் விதப்புரை கோரப்படும் மற்ற எல்லாக் கருமங்கள் பற்றியும் விதப்புரை செய்தல் வேண்டும்.

## பாகம் III

### நிறுவகத்தின் பகுதிகளும் கல்வித்துறைப் பணியாட்டொகுதியினரும்

*நிறுவகத்தின் பகுதிகள்.*

12. நிறுவகமானது, பேரவையின் மதியுரையின்மீது சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறானவையும் இதனகத்துப்பின்னர் "பகுதிகள்" எனக் குறிப்பீடு செய்யப்படுபவையுமான அத்தகைய கற்கைப் பகுதிகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்.

*பகுதிகளின் கல்வித்துறைப் பணியாட்டொகுதியினர்.*

13. ஒவ்வொரு பகுதியினதும் கல்வித்துறைப் பணியாட்டொகுதி பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:—

(அ) பேராசிரியர்கள்;

(ஆ) உறுப்பினர்கள்; அத்துடன்

(இ) ஆராய்ச்சி இணைவர்கள்.

*பணிப்பாளர் பேராசிரியராகப் பணிபுரியலாம்.*

14. பணிப்பாளர் தனது ஏனைய கடமைகளுடன் சேர்த்து, பகுதியொன்றில் பேராசிரியராகவும் பணிபுரியலாம்.

*நிறுவகத்தின் கல்வித்துறைப் பணியாட்டொகுதியினர்.*

15. பணிப்பாளர், எல்லாப் பகுதிகளினதும் பேராசிரியர்கள், உறுப்பினர்கள், ஆராய்ச்சி இணைவர்கள் ஆகியோர் ஒன்றுசேர்ந்து நிறுவகத்தின் கல்வித்துறைப் பணியாட்டொகுதியை அமைத்தல் வேண்டும்.

*பேராசிரியர்களின் வகுதிகள்.*

16. பேராசிரியர்கள் இரு வகுதியினராக இருத்தல் வேண்டும்; அவையாவன—

(அ) நிரந்தரமான பேராசிரியர்கள்; அத்துடன்

(ஆ) இடைவருகைப் பேராசிரியர்கள்.

*உறுப்பினர்களின் வகுதிகள் முதலியன.*

17. உறுப்பினர்கள் நான்கு வகுதியினராக இருத்தல் வேண்டுமென்பதுடன், இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் நியமிக்கப்படுதலும் அல்லது அனுமதிக்கப்படுதலும் வேண்டும்:—

(அ) நிறுவகத்தின் நிரந்தரமான கல்வித்துறைப் பணியாட்டொகுதியின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்களான நிரந்தரமான உறுப்பினர்கள்;

(ஆ) நிறுவகத்தின் இடைவருகைக் கல்வித்துறைப் பணியாட்டொகுதியின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டவர்களான இடைவருகை உறுப்பினர்கள்;

(இ) நிறுவகத்தின் இணை உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டவர்களும், இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ உள்ள நிறுவனங்களாக அல்லது ஆட்களாகவுள்ளவர்களுமான இணை உறுப்பினர்கள்; அத்துடன்

(ஈ) நிறுவகத்தின் தற்காலிகக் கல்வித்துறைப் பணியாட்டொகுதிக்கு உறுப்பினர்களாக அனுமதிக்கப்பட்டவர்களான ஆட்களாகவுள்ள உறுப்பினர்கள்.

18. ஆராய்ச்சி இணைவர்கள் இரு வகுதியினராக இருத்தல் வேண்டும்; அவையாவன— ஆராய்ச்சி இணைவர்களின் வகுதிகள்.

(அ) சிரேட்ட ஆராய்ச்சி இணைவர்கள்; அத்துடன்

(ஆ) கனிட்ட ஆராய்ச்சி இணைவர்கள்.

## பாகம் IV

### கல்வித்துறைப் பணியாட்டொகுதியினதும் ஏனைய பணியாட்டொகுதியினதும் நியமனமும், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடும், வேறு கருமங்களும்.

19. (1) நிறுவகத்தின் முதலாவது பணிப்பாளர், சனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும். பேரவையின் விதப்புரைகளைக் கருத்திற்கெடுத்த தன்பின்னர் அத்தகைய பதவிக்கான அடுத்துவரும் நியமனங்கள் சபையினால் செய்யப்படுதல் வேண்டும். பணிப்பாளர், இணைப் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் ஆகியோரது நியமனம்.

(2) பணிப்பாளர், நிறுவகத்தின் முழுநேர அலுவலரொருவராக இருத்தல் வேண்டும். பேரவையின் முடிபுகளைச் செயற்படுத்துவதற்கு அவர் பொறுப்பாக இருத்தல் வேண்டுமென்பதுடன், சபையினால் தனக்குக் குறித்தொதுக்கப்படக்கூடியவையான அத்தகைய வேறு கடமைகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) இணைப் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள் எவரேனும் இருப்பின் அவர்களும், பேரவையின் விதப்புரைகளைக் கருத்திற்கெடுத்த தன்பின்னர் சபையினால் நியமிக்கப்படலாம்.

20. (1) பேரவையின் விதப்புரைகளைக் கருத்திற்கெடுத்ததன்பின்னர், பேராசிரியர்களினதும் உறுப்பினர்களினதும் நியமனம் சபையினால் செய்யப்படுதல் வேண்டும். பேராசிரியர்களினதும், உறுப்பினர்களினதும், ஆராய்ச்சி இணைவர்களினதும் நியமனமும், அவர்கள் தொடர்பான விதிகளும்.

(2) சம்பந்தப்பட்ட பகுதியின் பேராசிரியருடன் அல்லது தலைவருடன் ஆன கலந்தாலோசனையுடன் ஆராய்ச்சி இணைவர்கள் பணிப்பாளரினால் நியமிக்கப்படலாம்; அத்தகைய எல்லா நியமனங்களும் சபைக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(3) நிறுவகத்தின் பணிப்பாளர், இணைப் பணிப்பாளர்கள், பிரதிப் பணிப்பாளர்கள், பேராசிரியர்கள், உறுப்பினர்கள் அத்துடன் ஆராய்ச்சி இணைவர்கள் ஆகியோரது சிறப்புரிமைகளை வரையறுத்து சபையினால் விதிகள் ஆக்கப்படலாம்.

ஏனைய பணியாட்டொகுதியினரை சபை நியமிக்கலாம்.

21. சபையானது அவசியமானதெனக் கருதக்கூடியவாறாக நிறுவகத்தின் அத்தகைய வேறு அலுவலர்களையும் சேவையாளர்களையும் சபையானது, நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமிக்கலாம்.

கல்வித்துறைப் பணியாட்டொகுதியினர் உட்பட எல்லாப் பணியாட்டொகுதியினர் மீதும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைச் சபை பிரயோகித்தல்.

22. இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய, சபையானது—

(அ) நிறுவகத்தின் கல்வித்துறைப் பணியாட்டொகுதியினர் உட்பட பணியாட்டொகுதியினரைப் பதவிநீக்கம் செய்பவராமென்பதுடன், அவர்களின்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டையும் பிரயோகிக்கலாம் ;

(ஆ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் வேதனங்களை அல்லது சம்பளத்தை அல்லது வேறு ஊதியத்தை நிர்ணயிக்கலாம் ; அத்துடன்

(இ) அத்தகைய பணியாட்டொகுதியினரின் சேவை நியதிகளையும் நிபந்தனைகளையும் தீர்மானிக்கலாம் :

ஆயின், எவ்வாறாயினும், வன்மமாகக் கடமையைக் கைவிட்டமை என்ற ஏதுவின்மீது அல்லது ஒழுக்கக்கேட்டுக்காக அல்லது எழுத்தில் பதியப்படவேண்டியதான வேறு நல்ல, போதிய காரணத்துக்காக, கூட்டமொன்றில் சபையினது உறுப்பினர்களின் வாக்குகளில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை மூலமன்றி, கல்வித்துறைப் பணியாட்டொகுதியின் உறுப்பினர் எவரும் பதவிநீக்கம் செய்யப்படலாகாது.

21 ஆம், 22 ஆம் பிரிவுகளிற் குறிப்பீடு செய்யப்பட்ட கருமங்களை ஆளுவதற்கு விதிகள் ஆக்கப்படலாம்.

23. இருபத்தோராம் பிரிவிலும், 22 ஆம் பிரிவிலும் குறிப்பீடு செய்யப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது அவற்றில் எவை தொடர்பிலும் இச்சட்டத்தின்கீழ் விதிகள் ஆக்கப்படலாம்.

பகிரங்க அலுவலர்களையும், உள்ளூராட்சிச் சேவையின் அல்லது ஏதேனும் உள்ளூராதிகார சபையின் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நியமித்தல்.

24. (1) சபையின் வேண்டுகோளின்பேரில், பகிரங்க சேவையிலுள்ள எவரேனும் அலுவலர், அவ்வலுவலரினதும், அரசாங்க நிருவாகத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்தோடு, சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது அதேபோன்ற சம்மதத்தோடு அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின் 13(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்பட்டவரும் பகிரங்க சேவையிலுள்ளவருமான எவரேனும் அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல்

வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் 13(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்பட்டவரும் பகிரங்க சேவையிலுள்ளவருமான எவரேனும் அலுவலருக்கும், அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(3) குறிப்பிட்ட ஒரு காலப்பகுதிக்கு அரசாங்கத்துக்குச் சேவைபுரிவார் என்று உடன்பட்டு அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றைச் செய்துள்ள எவரேனும் ஆளைச் சபையானது ஊழியத்திலமர்த்துமிடத்து, அந்த ஆளினால் நிறுவகத்துக்குப் புரியப்படும் ஏதேனும் சேவைக்காலப் பகுதி, அத்தகைய ஒப்பந்தத்திற்கான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்குப் புரியப்பட்ட சேவையாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(4) சபையின் வேண்டுகோளின்பேரில், உள்ளூராட்சிச் சேவையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர், விடயத்திற்கேற்றுற்போன்று, அவ்வலுவலரின் அல்லது சேவையாளரின் சம்மதத்தோடும், உள்ளூராட்சிச் சேவை ஆலோசனைச் சபையின் அல்லது உள்ளூரதிகாரசபையின் சம்மதத்தோடும், அச்சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு அந்த நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம், அல்லது விடயத்திற்கேற்றுற்போன்று, அச்சபையும் ஆணைக்குழுவும் அல்லது உள்ளூரதிகாரசபையும் உடன்பட்டுக் கொள்ளக்கூடியவாறான அத்தகைய நியதிகளின்மீதும் நிபந்தனைகளின்மீதும் (ஓய்வூதிய உரிமைகள், சகாய நிதிய உரிமைகள் தொடர்பான நியதி நிபந்தனைகள் உட்பட) அதேபோன்ற சம்மதத்தோடு நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(5) பகிரங்க சேவையின் எவரேனும் அலுவலர், அல்லது உள்ளூராட்சிச் சேவையின் அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையின் எவரேனும் அலுவலர் அல்லது சேவையாளர் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, அவர், அத்தகைய பணியாட்டொகுதியின் வேறு எவரேனும் உறுப்பினரைப்போன்று அதே ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கு அமைந்தவராதல் வேண்டும்.

(6) இப்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட எவரேனும் ஆள் நிறுவகத்தின் பணியாட்டொகுதிக்கு ஊழியத்திலமர்த்தப்படுதலானது சனாதிபதியின் எழுத்திலான முன் அங்கீகாரமின்றி முடிவுறுத்தப்படுதலாகாது.

## பாகம் V

### அடிப்படைக் கற்கைகள் நிறுவகச் சகாய நிதியம்

25. இதனகத்துப்பின்னர் "சகாய நிதியம்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவதும் அடிப்படைக் கற்கைகள் நிறுவகச் சகாய நிதியம் என அழைக்கப்பட வேண்டியதும் அறியப்படவேண்டியதுமான நிதியமொன்றைச் சபை தாபித்தல் வேண்டும். அடிப்படைக் கற்கைகள் நிறுவகச் சகாய நிதியம்.

சகாய நிதியத்தை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகள்.

26. சகாய நிதியத்தை ஒழுங்குபடுத்துவதற்காகவும், அதன் நிருவாகத்திற்காகவும், முகாமைக்காகவும், அத்துடன் சகாய நிதியத்தின் இடைநேர் விளைவான எல்லாக் கருமங்களுக்காகவும் அல்லது அதனுடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களுக்காகவும் சபையானது விதிகளை ஆக்கலாம்.

சகாய நிதியத்துக்கான உதவு தொகைகள்.

27. (1) நிறுவகத்தினால் ஊழியத்திலமர்த்தப்பட்டுள்ள பேராசிரியர், உறுப்பினர், இணைவர், அலுவலர், சேவையாளர் ஆகிய ஒவ்வொருவரும், அவர் ஊழியத்திலமர்த்தப்பட்ட தேதியிலிருந்து தொடங்கி, அவரது சம்பாத்தியங்களில் பத்து சதவீதத்துக்குச் சமமான ஒரு தொகையை, அவரது சம்பளத்திலிருந்து மாதந்தோறும் சமமாகக் கழிக்கப்படும் முறையில், சகாய நிதியத்துக்கு உதவுதொகையாகச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், நிறுவகமானது, மேலதிகமாக, அதே நேரத்தில், ஒவ்வோர் உதவுதொகை செலுத்துநர் தொடர்பிலும், அந்த உதவுதொகை செலுத்துநரின் சம்பாத்தியங்களில் பதினைந்து சதவீதத்துக்குச் சமமான ஒரு தொகையை அல்லது சபை தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய வேறு தொகையை நிதியத்துக்கு உதவுதொகையாகச் செலுத்துதலும் வேண்டும்.

(2) செயலாளர், சகாய நிதியத்துக்காக ஒரு பொதுக் கணக்கையும், அந்நிதியத்துக்கு உதவுதொகை செலுத்தும் ஒவ்வொருவர் தொடர்பிலும் வெவ்வேறு கணக்குகளையும் திறந்துவைத்திருத்தல் வேண்டும். சகாய நிதியத்துக்கு ஓர் உதவுதொகை செலுத்துநராற் செலுத்தப்பட்ட எல்லா உதவுதொகைகளும், அந்த உதவுதொகை செலுத்துநர் தொடர்பில் நிறுவகத்தால் செலுத்தப்பட்ட எல்லா உதவுதொகைகளும், நிதியத்தில் அந்த உதவுதொகை செலுத்துநரின் கணக்கில் வரவுவைக்கப்படுதல்வேண்டும்.

(3) ஓர் உதவுதொகை செலுத்துநரின் கணக்கில் அவரது வரவிலிருக்கும் தொகையானது, அதற்கெனச் சபையினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியின் ஏற்பாடுகளுக்கமைய, அந்த உதவுதொகை செலுத்துநர் நிறுவகத்தின் விதிகளுக்கிணங்க ஓர் உதவுதொகை செலுத்துநராக இல்லாதொழியும் நாள்வரையில், நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாக உள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன், சபையினால் நிருணயிக்கப்படவேண்டிய வீதத்திலான கூட்டு வட்டியோடு திரட்டப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளில் அந்த உதவுதொகை செலுத்துநரின் கணக்கு மூடப்படுதலும் வேண்டும். ஓர் உதவுதொகை செலுத்துநரின் வரவிலிருக்கும் திரண்ட பணத்தொகையானது கணக்கு மூடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் கொண்ட ஒரு காலப்பகுதிக்குள் செலுத்தப்படாதிருக்குமிடத்து, எந்த நாளன்று அவரது வரவிலிருக்கும் முழுத்தொகையும் செலுத்தப்படுகின்றதோ அந்த நாளுக்கு முந்திய மாதத்தின் கடைசிநாள் வரை இப்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக அதே வீதத்திலான வட்டி செலுத்தப்படுதல் வேண்டும் :

ஆயின், அவரது கணக்கு எத்தேதியில் மூடப்படுகின்றதோ அத்தேதிக்குப் பின்னர் திரளும் வட்டியானது, அத்தகைய உதவுதொகை செலுத்துநருக்கு அத்தகைய தொகையைக் கொடுப்பதில் ஏற்பட்ட தாமதம் உதவுதொகை செலுத்துநரின் ஏதேனும் தவறுகையின் காரணமாகவிருந்தவிடத்து, செலுத்தப்படுதலாகாது.

உதவுதொகை செலுத்துநர்களுக்கு மீளச் செலுத்துதல்.

28. (1) இருபத்தேழாம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் ஏற்பாடு செய்யப்பட்டவாறாக எவரேனும் உதவுதொகை செலுத்துநருக்குச் செலுத்தப்படற்பாலதான தொகையானது, 29 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, செயலாளரால் அவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(2) உதவுதொகை செலுத்துநர் ஒருவர், 27 (3) ஆம் பிரிவின்கீழ் ஓர் உதவுதொகை செலுத்துநராக அவர் எத்தேதியில் இல்லாதொழிகின்றாரோ அத்தேதிக்கு முன்னர், ஒன்றில் சுகவீனம் காரணமாக அல்லது இயலாமை காரணமாக அல்லது அவர் எப்பதவியில் ஊழியத்திலமர்த்தப்பட்டுள்ளாரோ அப்பதவியானது ஒழிக்கப்படுவதன் காரணமாக நிறுவகத்தால் ஊழியத்திலமர்த்தப்படாதொழியுமிடத்து, அல்லது நிறுவகத்தின் சேவையிலிருந்து தன்னிச்சையாக ஓய்வுபெறுமிடத்து, செயலாளர், 29 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அவர் அவ்வாறு ஊழியத்திலமர்த்தப்படாதொழிந்த தேதியில் சகாய நிதியத்திலுள்ள அவரது கணக்கின் வரவில் திரண்டுள்ள முழுத்தொகையையும், உதவுதொகை செலுத்துநருக்குச் செலுத்துதல்வேண்டும்.

(3) உதவுதொகை செலுத்துநர் ஒருவர், 27 (3) ஆம் பிரிவின்கீழ் ஓர் உதவுதொகை செலுத்துநராக அவர் எத்தேதியில் இல்லாதொழிகின்றாரோ அத்தேதிக்கு முன்னர் நிறுவகத்தின் சேவையிலிருந்து நீக்கப்படுமிடத்து, செயலாளர், 29 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, அவர் சேவையிலிருந்து நீக்கப்பட்ட தேதிவரை சகாய நிதியத்துக்கு அவரால் உதவுதொகையாகச் செலுத்தப்பட்ட தொகையையும், அத்துடன் அதன்மீது திரண்ட வட்டியையும் சேர்த்து அந்த உதவுதொகை செலுத்துநருக்குக் கொடுத்தல் வேண்டும்.

(4) உதவுதொகை செலுத்துநர் ஒருவர் நிறுவகத்தின் சேவையிலிருக்கையில் இறக்குமிடத்து, செயலாளர், 29 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய, சகாய நிதியத்தில் அந்த உதவுதொகை செலுத்துநரின் கணக்கின் வரவில் திரண்டுள்ள முழுத் தொகையையும், இறந்த உதவுதொகை செலுத்துநரின் மரணச்சொத்துக்கு அல்லது அத்தகைய தொகைக்குச் சட்டமுறையாக உரித்துடையவரான ஆளுக்குக் கொடுத்தல் வேண்டும்.

சகாயநிதியத்திலிருந்து செய்யப்படும் கழிப்புகள் முதற் பொறுப்பாதல்.

29. இப்பாகத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், அத்துடன் வேறேதேனும் உரிமைக்கு அல்லது பரிகாரத்துக்குப் பங்கமின்றியும், உதவுதொகை செலுத்துநர் ஒருவர் நிறுவகத்தினால் ஊழியத்திலமர்த்தப்பட்டிருந்த காலப்பகுதியின்போது எந்நேரத்திலேனும் அவரது நேர்மையின்மை காரணமாக அல்லது அசட்டை காரணமாக நிறுவகத்துக்கு ஏற்பட்ட ஏதேனும் இழப்புத் தொகை அல்லது சேத ஈட்டுத் தொகை சகாய நிதியத்தில் அந்த உதவுதொகை செலுத்துநரின் கணக்கின் வரவிலுள்ள தொகைமீது முதற் பொறுப்பாக இருத்தல்வேண்டும்; அத்துடன் அத்தகைய தொகை 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க, ஏதேனும் கொடுப்பனவு செய்யப்படும்போது கழிக்கப்படலாம்.

நிதியத்துடன் மேலதிகமாக அல்லது அதற்கு மாற்றாக விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் இருத்தல்.

30. சபையானது, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரைக் கலந்தாலோசித்து, இப்பாகத்தின்கீழ் தாபிக்கப்பட்ட சகாய நிதியத்துக்கு மாற்றாக அல்லது அதனுடன் மேலதிகமாக ஓய்வூதியத் திட்டமொன்றையும், விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியம் ஒன்றையும் தாபிக்கலாம். அத்தகைய ஓய்வூதியத் திட்டத்தையும் அத்தகைய விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தையும் ஒழுங்குபடுத்துவதற்கும், நிருவகிப்பதற்கும், முகாமைசெய்வதற்கும் சபையால் விதிகள் ஆக்கப்படலாம்.

செயலாளரின் தத்துவங்களை இன்னொர் அலுவலருக்குக் கையளித்தல்.

31. இப்பாகத்தின்கீழான செயலாளரின் தத்துவங்களும் கடமைகளும் சபையின் சம்மதத்துடன் நிறுவகத்தின் அலுவலரொருவருக்குக் கையளிக்கப்படலாம்.

## பாகம் VI

### நிதி

அரசாங்க மானியக் கொடை.

32. நிறுவகத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றும் நோக்கத்துக்குப் போதுமானதான ஒரு மானியக்கொடையை அரசாங்கம் நிறுவகத்துக்கு ஆண்டுதோறும் நன்கொடையாக அளிக்கலாம்.

ஏதேனும் வளத்திலிருந்து மானியக் கொடைகளைப் பெறுவதற்கு நிறுவகம் உரித்துடையதாதல்.

33. நிறுவகமானது அதன் இலக்குகளையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதற்காக இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள ஏதேனும் வளத்திலிருந்து மானியக்கொடைகள் பெறுவதற்கும், அத்துடன் எவரேனும் தனியாளுடன், அல்லது ஏதேனும் நிறுவனத்துடன் அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவுடன் அத்தகைய மானியக்கொடைகளுக்காக நேரடியாகப் பேச்சுவார்த்தை நடாத்தவும் நிறுவகம் உரித்துடையதாதல் வேண்டும்.

நிறுவகத்தின் நிதியம்.

34. (1) நிறுவகம் அதனது சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் நிதியத்துக்குள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) நிறுவகத்தின் பயன்பாட்டிற்காகப் பாராளுமன்றத்தினால் காலத்துக்குக் காலம் வாக்களிக்கப்படக்கூடியனவான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;

(ஆ) நிறுவகத்தினால் அதன் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் பெறப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும் ; அத்துடன்

(இ) எவையேனும் கொடைகளும் அல்லது பணவகையிலான நன்கொடைகளும் :

ஆயின், எவ்வாறாயினும், குறிப்பிட்ட நோக்கங்களுக்காகச் செய்யப்பட்ட மானியக்கொடைகளிலிருந்தும் குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்தும் பெறப்படும் ஏதேனும் வருமானம், நிறுவகத்தின் கணக்குகளில் தனித்தனியாகக் கணக்கு வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், நிறுவகத்தின் பொதுவான நோக்கங்களுக்காகவோ அல்லது அத்தகைய மானியக்கொடைகள் அல்லது அறக்கொடைகள் முறையே எந்நோக்கங்களுக்காகவும் அல்லது குறிக்கோள்களுக்காகவும் செய்யப்பட்டனவோ அந்த எவையேனும் நோக்கங்களும் அல்லது குறிக்கோள்களும் தவிர்ந்த எதற்காகவோ அத்தகைய வருமானத்திலிருந்து கொடுப்பனவு எதுவும் செய்யப்படுதலுமாகாது:

ஆயின், மேலும், குறிப்பாக ஆராய்ச்சிக்கெனப் பாராளுமன்றத்தினால் வாக்களிக்கப்பட்ட நிதிகள், தனியான ஓர் " ஆராய்ச்சி நிதியத்திற்குள் " போடப்படலாம்.

(3) நிறுவகத்தின் தத்துவங்களையும், பணிகளையும், கடமைகளையும் பிரயோகிப்பதிலும், நிறைவேற்றுவதிலும், புரிவதிலும் நிறுவகத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத்தீர்ப்பதற்குத் தேவையான எல்லாப் பணத்தொகைகளும், அத்துடன் இச்சட்டத்தினால் அல்லது இச்சட்டத்தின்கீழ் அத்தகைய நிதியத்திலிருந்து கொடுக்கப்படும்படி தேவைப்படுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளும், நிறுவகத்தின் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**தீர்வைகளிலிருந்தும் வரிகளிலிருந்தும் விலக்களித்தல்.**

35. (1) நிறுவகமானது ஏதேனும் உள்ளூரதிகாரசபையினால் விதிக்கப்படும் எவையேனும் வீதவரிக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) அமைச்சரானவர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன், நிறுவகத்தால் இறக்குமதி செய்யப்பட்ட எவையேனும் பொருட்களின் இறக்குமதியானது நிறுவகத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் முன்னேற்றுவதற்கு உகந்ததெனக் கருதப்படுமெனில், அத்தகைய பொருட்களின் மீதான ஏதேனும் சுங்கவரிக் கொடுப்பனவிலிருந்து நிறுவகத்துக்கு விலக்களிக்கலாம்.

(3) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பெறுமதிவரையில் இலங்கைப் பிரசையொருவரல்லாத நிறுவகத்தின் பேராசிரியர், உறுப்பினர் அல்லது இணைவர் ஒருவரால் இறக்குமதி செய்யப்பட்ட எல்லாத் தனிப்பட்ட பொருட்களும் அத்துடன் அவரால் இறக்குமதி செய்யப்பட்ட எல்லா உயர்தொழிற் சாதனங்களும், புத்தகங்களும் வேறு அறிவியல்சார் சாதனங்களும், சுங்கத்தீர்வைக் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(4) எழுத்திலான வேறேதேனும் சட்டத்தில் முரணாக எது எப்படியிருப்பினும், இப்பிரிவின் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டும்.

*நிறுவகத்தின் கணக்குகள்.*

36. (1) நிறுவகத்தின் வருமானமும் செலவினமும், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் பற்றிய செவ்வையான கணக்குப் புத்தகங்களைச் சபை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(2) சபையானது, ஒவ்வோர் ஆண்டிலும் திசெம்பர், முப்பத்தோராம் நாளில் அதன் புத்தகங்களைச் சரிசெய்வித்தல் வேண்டுமென்பதுடன், அடுத்த மார்ச்சு முப்பத்தோராம் நாளுக்கு முன்னராக, முதலிற் கூறப்பட்ட தேதிவரை ஆக்கப்பட்டதான வருமான செலவினக் கணக்கொன்றையும், நிறுவகத்தின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும் பற்றிய பொழிப்பொன்றைக் கொண்ட ஐந்தொகை ஒன்றையும் தயாரிக்கச் செய்தலும் வேண்டும்.

(3) வருமான செலவினக் கணக்கும், ஐந்தொகையும் சபையின் தவிசாளராலும் அதற்கெனச் சபையினால் அதிகாரமளிக்கப்படக்கூடியவர்களான நிறுவகத்தின் அத்தகைய வேறு அலுவலர்களாலும் ஒப்பமிடப்படுதல் வேண்டும்.

(4) பகிரங்கக் கூட்டுத்தாபனங்களின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வது தொடர்பான அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள், நிறுவகத்தின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதற்கும் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் VII

### பொது

*பால், இனம், சமயக்கோட்பாடு, தேசியம் அல்லது மதம் காரணமாகப் பட்சம் காட்டுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.*

37. எல்லா ஆட்களும், அவர்கள் ஆணாயிருப்பினுஞ்சரி, பெண்ணாயிருப்பினுஞ்சரி, எந்த இனத்தை, சமயக்கோட்பாட்டை அல்லது தேசியத்தைச் சேர்ந்தவர்களாயிருப்பினுஞ்சரி, நிறுவகத்தில் அனுமதி பெறற்குரியவர்களாதல் வேண்டும் ; அத்துடன் எவரேனும் ஆள் நிறுவகத்தின் ஒரு பணிப்பாளராக, பேராசிரியராக, உறுப்பினராக அல்லது ஆராய்ச்சி இணைவராக சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு அல்லது அதில் ஏதேனும் நியமனம் வகிப்பதற்கு அல்லது அதில் ஏதேனும் நலனை அல்லது சிறப்புரிமையை வைத்திருப்பதற்கு, துய்ப்பதற்கு அல்லது பிரயோகிப்பதற்கு அவரை உரித்துடையவராக்குவதற்கு சமய நம்பிக்கை அல்லது சமய ஒப்புதல் பற்றிய சோதனை எதுவும் மேற்கொள்ளப்படுதலோ அல்லது சுமத்தப்படுதலோ ஆகாது.

*நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயல்களுக்கான நட்டோத்தரவாதம்.*

38. (1) இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட சபையின் எவரேனும் உறுப்பினருக்கெதிராக அல்லது நிறுவகத்தின் எவரேனும் அலுவலருக்கு, சேவையாளருக்கு அல்லது முகவருக்கு எதிராக, இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது அத்தகைய ஆளால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயலுக்காக தொடர்ச்சி அல்லது குற்றவழக்கேதுவும் தொடுக்கப்படுதலாகாது.

(2) நிறுவகத்தால் அல்லது நிறுவகத்துக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் கொண்டுவரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிறுவகத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, நிறுவகத்தின் நிதிகளிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிறுவகத்துக்குச் செலுத்தப்பட்ட அல்லது நிறுவகத்தினால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுத்தொகைகள், நிறுவகத்தின் நிதிகளில் வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவரான அத்தகைய எவரேனும் ஆளினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கொள்ளப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில், ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் உறப்படும் செலவு எதுவும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்ப்பளிப்பின், அத்தகைய செலவு, அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அத்தகைய ஆளினால் அறவிடப்பட்டாலன்றி, நிறுவகத்தின் நிதிகளிலிருந்து அவருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவரின் உடலுக்கெதிராக அல்லது அவரது ஆதனத்திற்கெதிராக எழுத்தாணை எதுவும் வழங்கப்படலாகாது.

39. நிறுவகத்துக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கு நடவடிக்கையில் சபையின் எவரேனும் உறுப்பினரொருவரின் அல்லது கல்வித்துறைப் பணியாட்டொகுதி உறுப்பினரின் அல்லது நிறுவகத்தின் எவரேனும் அலுவலரின் அல்லது சேவையாளரின் உடலுக்கெதிராகவோ அல்லது அவரது ஆதனத்துக்கெதிராகவோ எழுத்தாணை எதுவும் வழங்கப்படலாகாது.

நிறுவகத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின்கீழ் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

40. நிறுவகத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும், அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் நிறுவகமானது அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.

41. நிறுவகமானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

விதிகளை ஆக்குவதற்கான தத்துவம்.

42. இச்சட்டத்தினால் எக்கருமங்கள் தொடர்பாக விதிகள் ஆக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்டுள்ளதோ அல்லது அதிகாரமளிக்கப்பட்டுள்ளதோ அவ்வெல்லாக் கருமங்கள் தொடர்பிலும் சபையானது, நிறுவகத்தின் சார்பில் விதிகளை ஆக்கலாம்.

நிலைமாறுகால ஏற்பாடுகள்.

**43.** இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளில் எது எப்படியிருப்பினும், நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படுவதான முதல் ஐந்து ஆண்டுகளின்போதும், சபையானது—

(அ) பேரவையானது அமைக்கப்பட்டிராதிருப்பினுங்கூடச் செயலாற்றலாம் ;

(ஆ) இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளின்கீழ் பேரவையின் முன் கலந்தாலோசனை அல்லது முன்பரிசிலனை தேவைப்படாதுள்ள கருமங்களில் அத்தகைய பேரவையைக் கலந்தாலோசிக்காமலும் அதன் மதியுரையை அல்லது விதப்புரையைப் பரிசிலனை செய்யாமலும் செயலாற்றலாம் ;

(இ) பேரவைக்காகவும் பேரவையின் சார்பிலும் செயலாற்றலாம்.

பொருள் கோடல்.

**44.** இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினுலன்றி—

"சம்பாத்தியங்கள்" என்பது, 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தில் உள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும் ;

"அடிப்படை", "உயர்நிலை" கற்கைகள் என்பவை, பரீட்சார்த்தமான புலனுய்வுகளையும் உள்ளடக்கும் ;

"எதிர்க்கட்சித் தலைவர்" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர் எனப் பொருளாகும் ;

"உள்ளூராதிகாரசபை" என்பது, ஏதேனும் மாநகரசபை, நகரசபை, பட்டினசபை அல்லது கிராமச்சபை எனப் பொருளாவதுடன், அத்தகைய ஏதேனும் சபையினுல் பிரயோகிக்கப்படும் தத்துவங்களையும், நிறைவேற்றப்படும் பணிகளையும், புரியப்படும் கடமைகளையும் நேரொத்த அல்லது அவைபோன்ற தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கெனவும், பணிகளை நிறைவேற்றுவதற்கெனவும், கடமைகளைப் புரிவதற்கெனவும் ஏதேனும் சட்டத்தினுல் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகாரசபையையும் உள்ளடக்கும் ;

"அலுவலர்" என்பது, பணிப்பாளரையும், பிரதிப் பணிப்பாளரையும், செயலாளரையும், நூலகப் பொறுப்பாளரையும், சபையினால் அலுவலரொருவராக ஏற்று அங்கீகரிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளையும் உள்ளடக்கும்; ஆனால் இணைப் பணிப்பாளரொருவரை உள்ளடக்காது;

"சனாதிபதி" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி எனப் பொருளாகும்;

"முதலமைச்சர்" என்பது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முதலமைச்சர் எனப் பொருளாகும்;

"பல்கலைக்கழகம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட்ட ஒரு பல்கலைக்கழகம் எனப் பொருளாகும்; ஆனால் பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றை உள்ளடக்காது.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30; (வெளிநாடு) ரூபா 40, ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.